## ‘பெரியார் என்னும் பெரு நெருப்பு’!




“தன்னை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் பேசுவதை விட, பரப்புவதை விட எதிரிகளால்தான் தனது கொள்கைகள் வேகமாக பரவுகின்றன” என்று வாழ்ந்த காலத்திலேயே கூறியவர் பெரியார். அந்தக் கூற்று எத்தனை பொருத்தமானது என்பது, அவர் மறைந்து அரை நூற்றாண்டுக்கு மேலாகிவிட்ட போதிலும், இப்போதும் நிரூபணமாகிக் கொண்டிருக்கிறது. கொள்கை எதிரிகளும், அவருக்குத் துணைபோகும் துரோகிகளும் பெரியாரை விமர்சிக்க விமர்சிக்கக் கூடுதலாகப் பரவிக் கொண்டிருக்கிறார் பெரியார்.

எதிரிகள் வழக்கம்போல பெரியார் மீது சேற்றை வாரி இறைக்க முயன்று, மீண்டும் லைம்லைட்டிற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆனால், பரப்பிய அவதூறுகளுக்கு ஆதாரம் எங்கே என்று கேட்டால், ஓடி ஒளிந்து கொள்கிறார்கள்.

இருந்தாலும், பெரியார் கொள்கைகளை இதுவரை அறியாதவர்களும் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பாக இந்த விவாதங்கள் அமைந்திருக்கின்றன. இந்த விவாதத்தில் ஓர் முக்கிய அங்கமாக, ‘பெரியார் என்னும் பெருநெருப்பு’ என்ற தலைப்பில் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருக்கிறார்கள் முற்போக்கு யூடியூபர்கள். ‘பேரலை’– ‘அரண் செய்’ – ‘யூ2புரூடஸ்’– ‘டிரைப்ஸ்’ இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்தக் கருத்தரங்கம் ஜனவரி 25–ஆம் தேதி மாலை 5 மணிக்கு சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள தமிழ் இணையக் கல்விக் கழக அரங்கில் நடைபெற உள்ளது.

வி.சி.க. துணைப் பொதுச்செயலாளர் ஷாநவாஸ், புதுச்சேரி மாநில திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் லோகு அய்யப்பன், ஊடகவியலாளர்கள் கரிகாலன், இந்திரகுமார் தேரடி ஆகியோர் உரையாற்ற உள்ளனர். வாய்ப்புள்ளோர் செல்க, பயன்பெறுக.

## :.ப்ளாஷ்பேக்





குடந்தை கீதப்பிரியன்

### அறிவியல் தமிழைத் தொடங்கி வைத்த கலைஞர்!

வார்த்தைச் சித்தர் வலம்புரிஜான் அவர்களின் ‘தாய்’ பத்திரிகையில், நான் துணை ஆசிரியராகப் பணியாற்றியபோது, அவரும், மணவை முஸ்தபா அவர்களும் இணைந்து, ‘அறிவியல் தமிழ் மன்றம்’ சார்பில், ஒரு நாள் கருத்தரங்கம் ஒன்றை நடத்தினர். தமிழில் அறிவியல் கலைச் சொற்களை வளர்ப்பதற்கான அந்த நிகழ்வுக்குச் சிறப்புரையாற்ற கலைஞர் அவர்கள் வருகை தந்தார். அவரை வரவேற்பதற்காகச் சென்ற நான், என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அழைத்துச் சென்றேன். கலைஞர் சரியாக மாலை 4 மணிக்கு வந்துவிட்டார். ஆனால், வலம்புரி ஜான் வருவதற்குத் தாமதமானதால், “தம்பி இன்னும் வரலையா?” என்று என்னிடம் கேட்டார். நான் அவர் வந்துகொண்டிருக்கிறார் என்று சொல்லிமுடிக்கும் முன்பே, வலம்புரி ஜான் வந்துவிட்டார். தாமதமாக வந்ததற்கு அவர் மன்னிப்பு கேட்டதும், ‘மன்னிக்கலாம் மன்னிக்கலாம்’ என்று சொன்னபடியே மேடை ஏறினார் கலைஞர். வலம்புரி ஜான் அப்போது எம்.ஜி.ஆருடன் நெருக்கமாக இருந்தார். ஆனால், தமிழ் இலக்கிய ஆளுமையாக கலைஞரை அவரால் தவிர்க்க முடியவில்லை.

**– குடந்தை கீதப்பிரியன், எழுத்தாளர் மற்றும் பத்திரிகையாளர், சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### திரைத்துறை அண்ணாவின் வசம்!

1949-ஆம் ஆண்டு தி.மு.க. உருவாகி, நடைபெற்ற முதல் பொதுக்குழுவில், இரண்டு நடிகர்கள் பங்கேற்றனர். ஒருவர் டி.வி.நாராயணசாமி, மற்றொருவர் கே.ஆர்.இராமசாமி. ஆனால், தி.மு.கழகம் மக்கள் இயக்கமாக வளர வளர, திரைத்துறையைச் சேர்ந்த பெரும்பாலான கலைஞர்கள், அண்ணாவின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களாக மாறிவிட்டனர். எஸ்.எஸ்.இராஜேந்திரன், சிவாஜி கணேசன், எம்.ஜி.இராமச்சந்திரன் என மிகப்பெரிய நடிகர் பட்டாளம் அண்ணாவுக்கு நெருக்கமானவர்களாக இருந்தனர்.

# அவதூறுகளால் அழிக்க முடியாதவர் பெரியார்!



தந்தை பெரியார் தமிழ்நாட்டின் தனித்துவம் மிக்கச் சிந்தனையாளர். உலகளவில் ஒப்பிடத்தக்க பெண்ணியக் கருத்துகளை முன்வைத்தவர். ‘பெண்ணியவாதிகளின் பைபிள்’ என்று போற்றத்தக்க, சீமோன் தி பொவார் எழுதிய ‘தி செகண்ட் செக்ஸ்’ – *The Second Sex* நூல் வெளிவருவதற்கு 16 ஆண்டுகளுக்கு முன்பே **‘பெண் ஏன் அடிமையானாள்’** என்ற மாபெரும் கருத்துக் களஞ்சியத்தைத் தந்தவர்.

அவர் ஒரு செல்வச்செழிப்பான குடும்பத்தில் பிறந்தவர். ஆனால், ஏழை, எளிய மக்களுக்காகச் சிந்தித்தவர். ‘கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை’யை மொழிபெயர்த்ததுடன் சமதர்மப் பிரச்சாரம் செய்தவர். அவர் ஒடுக்கப்பட்ட சாதியில் பிறந்தவர் அல்ல. ஆனால், ஒடுக்கப்பட்ட மக்களின் மீதான சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக உறுதியாக நின்றவர். ‘சாதியை ஒழிக்கும் வழி’ என்ற அம்பேத்கரின் நூலை மொழிபெயர்த்ததுடன்,‘தாழ்த்தப்பட்டோருக்கான இரட்டை வாக்குரிமை’, ‘மதமாற்றம்’ போன்ற அம்பேத்கரின் நிலைப்பாடுகளை ஆதரித்து ‘அம்பேத்கர் எனக்குத் தலைவர், உங்களுக்கும் அவர்தான் தலைவர்’ என்றவர். பெரியார் ஆணாகப் பிறந்தவர். ஆனால், பெண்களின் உரிமைகளுக்காகச் சிந்தித்தவர்.

இறக்கும்வரை மூத்திரச்சட்டியை ஏந்தியபடி, சாதிய இழிவு ஒழிக்க உழைத்தவர். ஆனால், அந்தப் பெரியாரைத்தான் இழிவு செய்ய, அரசியல் நேர்மையும் அறிவுநாணயமும் இல்லாத ஒரு கூட்டம் கிளம்பியிருக்கிறது.

தந்தை பெரியார் எப்போதும் விமர்சனங்களைச் சந்திக்கத் தயங்கியவர் அல்ல. அவர் வாழும் காலத்திலேயே கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டவர். ஆனால், அவர் பேசும் கூட்டங்களில் எல்லாம் கேள்விகளுக்கும் விமர்சனங்களுக்கும் இடமளித்தவர். கல், முட்டையோடு, மலம் என்று அவர்மீது பல பொருள்களை வீசி எறிந்திருக்கிறார்கள். ஆனால், அதையெல்லாம் தாங்கிக்கொண்டுதான், எந்த மக்கள் இதையெல்லாம் அவர்மீது எறிந்தார்களோ, அந்த மக்களின் உரிமைகளுக்காகவே அவர் பேசினார். அவர் இறந்து, 50 ஆண்டுகள் ஆனபின்னும் அவரை அவதூறு செய்ய சாதிய, மதவாதச் சக்திகளும் அவர்களிடம் கூலிவாங்கிக்கொண்டு குரைக்கும் கும்பலும் கிளம்புகிறது என்றால், அதுதான் தந்தை பெரியாரின் வெற்றி.

**எச்சில் துப்பி சூரிய நெருப்பை அழிக்க முடியாது என்பதை அறியாத மடையர்கள் அவர்கள். ஆனால், அறியாமை மட்டுமே இதற்குக் காரணமில்லை, அரசியல் சூழ்ச்சிதான் முக்கியமான காரணம்.**

அவர் எப்போதும், தான் சொன்னதை எல்லோரும் அப்படியே கண்மூடித்தனமாக நம்பவேண்டும் என்று சொன்னவரில்லை. ‘நானே சொன்னாலும் நம்பாதே. பகுத்தறிவு கொண்டு சிந்தி. உன் அறிவு ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், என் கருத்தை ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை’ என்றவர் பெரியார். ஆனால், இன்று அவரை அவதூறு செய்யக் கிளம்பியிருக்கும் பொய்யனோ ஆமைக்கறி, அரிசிக்கப்பல் கதை சொல்லி, மூளையற்ற மூடர் கூட்டத்தை ஏமாற்றிக்கொண்டிருப்பவர். தந்தை பெரியார், தான் பேசும் கூட்டங்களில் புத்தகங்களைக் கொண்டுவந்து ஆதாரங்களை அடுக்கிப் பேசியவர். ஆனால், பெரியார் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக அவதூறு கிளப்பி, ஆதாரம் கேட்டால் ஓடி ஒளியும் கோழைகள்தான் அவர் சிந்தனைகளை அழித்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். எச்சில் துப்பி சூரிய நெருப்பை அழிக்க முடியாது என்பதை அறியாத மடையர்கள் அவர்கள். ஆனால், அறியாமை மட்டுமே இதற்குக் காரணமில்லை, அரசியல் சூழ்ச்சிதான் முக்கியமான காரணம்.

இன்று பெரியாரின் மானுடச் சிந்தனைகளை உலகம் முழுவதுமுள்ள அறிஞர்கள் ஏற்று உரையாடுகிறார்கள். பெரியாரின் சமூகநீதிச் சிந்தனைகள் இன்று இந்திய அரசியலின் மையமாகியிருக்கிறது. பெரியாரின் நவீனப் பார்வைகள் இன்று அறிவியல் சாத்தியங்கள் ஆகியிருக்கின்றன. பட்டியலின மக்களின் போராட்டம் முதல் பாராளுமன்றம் வரை பெரியார் நினைவுகூரப்படுகிறார். உரிமைப்போராட்டங்களில் உச்சரிக்கப்படும் உதடுகளாய் பெரியார் இருக்கிறார். தமிழ்நாட்டில் மதவாதச் சக்திகள் நுழைய முடியாத தன்மான தடுப்புச்சுவராகப் பெரியார் இருக்கிறார். அவரின் சமூகநீதிச் சிந்தனைகளை ஏந்தி, திராவிட முன்னேற்றக்கழகம், கழகத்தலைவர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி மகத்தான மக்கள் ஆதரவைப் பெற்றிருக்கிறது.

இதைச் சீர்குலைக்க வேண்டும், மதவாதச் சக்திகள் நுழைவதற்கு வழி ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் அடிவருடி ஆதாயக் கும்பல் ‘பெரியாரை, திராவிடத்தை ஒழிப்பதுதான் என் முழுநேர வேலை’ என்று கிளம்பியிருக்கிறது. அவர் தாடி முடிக்குக்கூட சேதாரம் ஏற்படாமல், தமிழர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

## பொய்ப்பெட்டி 46

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”

# குறுக்கே வந்து குரைக்கும் ‘ஆமைக்குட்டி’!



***‘தமிழ் மண்ணில் சமத்துவத்தைப் பேசிய வள்ளுவரையும் வள்ளலாரையும் களவாட ஒரு கூட்டமே காத்திருக்கிறது’ என்று முதலமைச்சர் பேசினால், வள்ளுவரையும் வள்ளலாரையும் தி.மு.க.தான் அழிக்கிறது என்று ஒரு ‘ஆமைக்கறி கதைக் கூட்டம்’ குறுக்கே வருகிறதே. என்ன காரணம்?***

வாங்கிய காசுக்குக் குரைத்தால்தானே அடுத்தவேளை பசிக்கு ரொட்டித் துண்டு கிடைக்கும். அதிலும், கொடுத்த காசுக்கு மேலே குரைக்கும் அந்த பொய்மூட்டை போட்டோஷாப் ‘ஆமைக் கறி கதையாளர்களை’ விட்டுத்தள்ளுவோம். வள்ளுவரும் வள்ளலாரும் சாதி சமயமற்ற சமத்துவ சமுதாயத்தை வலியுறுத்தியவர்கள். தமிழ்நாட்டில் சாதி சமயத்தில் பிடிப்புள்ளவர்களும்கூட அதனை வைத்துப் பகை வளர்க்காமல் இணக்கமாகச் செயல்படுவது இந்த மண்ணின் மரபு. இந்தச் சமூக அமைதிக்குக் குறுக்கே காலந்தோறும் ‘போட்டோஷாப் கம்பெனிகளும், ஆமைக் கதையாளர்களும்’ அவர்களை ஏவி விடுபவர்களும் வந்துகொண்டே இருப்பார்கள். அவர்களை எதிர்க்கும் ஆயுதமாக வள்ளுவரையும் வள்ளலாரையும் ஏந்தியது, திராவிட இயக்கம்.

**பேருந்துகளில் திருக்குறள், திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கு, சென்னையில், வள்ளுவர் கோட்டம், குமரி முனையில் வள்ளுவர் சிலை எனக் கலைஞர் ஆட்சிக்கால சிறப்புகள் ஏராளம்.**

வள்ளலாரின் ஆறாம் திருமுறையில் உள்ள சமத்துவக் கருத்துகளை அச்சிட்டு வெளியிட்டது, தந்தை பெரியாரின் ‘குடிஅரசு’ பதிப்பகம். திருக்குறள் மாநாடுகளை நடத்தியவர் பெரியார். ‘பொங்கல் வாழ்த்து’ போல **‘குறள் வாழ்த்து’** அட்டைகளை அனுப்பவேண்டும் எனத் தமிழர்களிடம் அவர் வலியுறுத்தினார். திருக்குறள் மலிவுப் பதிப்பினைப் பரிசளிக்கச் செய்தார். அவர் வழியில்தான் அண்ணாவும் கலைஞரும் வள்ளுவரையும் வள்ளலாரையும் உயர்த்திப் பிடித்தனர். ‘ஜோதி இராமலிங்கம்’ என வள்ளலார் குறித்து எழுதிய அண்ணா, தன் ஆட்சிக் காலத்தில் சட்டமன்றத்தில் திருக்குறளுடன் அவையைத் தொடங்கும் வழக்கத்தைக் கொண்டு வந்தார். பேருந்துகளில் திருக்குறள், திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கு, சென்னையில், வள்ளுவர் கோட்டம், குமரி முனையில் வள்ளுவர் சிலை எனக் கலைஞர் ஆட்சிக்கால சிறப்புகள் ஏராளம். கருணைமிகு வள்ளலார் வழியில், பிச்சைக்காரர்கள் – தொழுநோயாளர்களுக்கான ‘மறுவாழ்வு இல்ல’ங்களை நிறுவி, அவர்களுக்கு உணவும் வாழ்வும் அளித்தவர் கலைஞர்.


திருக்குறளைப் போற்றி திருவள்ளுவர் சிலையின் வெள்ளிவிழாவைச் சிறப்பான முறையில் கொண்டாடியிருக்கிறது, திராவிட மாடல் அரசு. வள்ளலார் பிறந்த நாளான அக்டோபர் 5-ஆம் நாளைத் **தனிப்பெருங் கருணை நாள்** எனக் கடைப்பிடிக்கச் செய்திருக்கிறது. ‘சாதியிலே மதங்களிலே சாத்திரச் சண்டைகளிலே கோத்திரக் குப்பைகளிலே வீணே அலைந்து திரியாதீர்’ என்று பாடிய வள்ளலாரைத் திரித்து, அவரை சனாதனத்தின் அடையாளமாக்க முயற்சிக்கும் கூட்டமும், திருவள்ளுவருக்குக் காவி வண்ணமடிக்கும் அதே கூட்டமும்தான் இருவரையும் களவாடத் திட்டமிடுகின்றன என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்கு ஏன் அந்த ‘ஆமைக்குட்டி’ குறுக்கே வந்து குரைக்க வேண்டும்?

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

728

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131